
உ

சிவமயம்



யாழ்ப்பாணம் — நவாலி

உயர் குடித்தோன்றல்

திருவாளர் முதலியார் வை. மகேசனின்

சிரேஷ்ட புத்திரியும்

திருவாளர் நடராஜா அவர்களின்

பாரியாருமாகிய

மங்களாம்பிகை அவர்களின்

சிவப்பேறு தரித்த

# நினைவு மலர்

மலர்வு :
05-10-1934

உதிர்வு :
12-10-1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*



*

அறுசிர் விருத்தம்

அச்சம் மடம் நாண் ஒப்புரவு
ஆய நான்கு குணத்திறுக்கும்
மெச்சும் படியாய் வாழ்ந்தவுயர்
மேன்மை யாட்டி பேரனுடன்
உச்சம தாக உடனிருந்த
உண்மை மங்களாம் பிகைப்பொன்
இச்ச கத்தில் அச்சமிலா
திருந்த நங்கைபடம் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## தேகவியோகமெய்திய தினம்

### வெண்பா

ஆண்டு ருதிரோத்காரி ஆனபுரட் டாதி புதன்
பூண்ட திரயோதசி நான் பூர்வத்தே மாண்டகைய
நம்பி நடராசாவின் நல்ல மங்களாம்பிகைமான்
உடம்பருல குற்றன னென்றேது.

நல்ல திருமுகத்தாள் நங்கை அருந்ததி போல்
சொல்லுபுகழ் வாழ்விலுயர் சோதியாள் பல்லறமும்
செய்த பதிவிரதை சீர் மங்களாம்பிகையாள்
மெய்யனருட் பேறடைந்தாள் மிக்கு.

### கலித்துறை

உற்றுர் புலம்பிட ஊரார் கலங்கிட
பெற்றுர் விழுந்தழப் பேர் மங்களாம்பிகை
கற்றுர் விதியிதோ காலனேன் வந்தான் கடுகதியாய்
மற்றுர் நிகரில்லா மங்களாம்பிகை மறைந்தனளே.

## மனம் நிறை மாதரசி

# மங்களாம்பிகையின் வரலாறு

திருமகளும், கலைமகளும், பூமகளும் பொருந்தி பொலிவுறும் பதியாயும் புலவர்கள் தோன்றி அறநெறி புகட்டிய பூம்பதியாயும் திகழும் நவாலியம் பதியிலே உயர் வேளாளன் குடியிலே வன்னியசேகர முதலி மரபிலே தோன்றிய மாதவருக்கு வேலாயுதர் எனும் புத்திரன் உளராஞர். அவருக்கு தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளையும் கறைபோகக் கற்றுப் புலமை பெற்று ஆசிரியராகவும், கடையிற்சுவாமி பரமகுருசுவாமி குழந்தைவேற்சுவாமி ஆகியோரின் சீடராகவும் விளங்கிய இராமலிங்கம் அவர்கள் புதல்வராஞர். அவர் நவாலியூர் கணபதியார் மகள் பார்வதிப்பிள்ளையைக் கடிமணம் செய்து வைத்திலிங்கம் எனும் ஏகபுத்திரனை ஈன்றெடுத்தார். வைத்திலிங்கம் அவர்கள் அவ்வூர் அக்குறுணி கார்த்திகேசுவின் மகள் செல்லமுத்துவை திருமணம் செய்து மகேசன் என்னும் ஏகபுதல்வரைப் பெற்றெடுத்தனர். இவர் நவாலி வேளாளர் குலத்து கதிரவேலுவின் மகன் நாகமுத்து அவரது மகன் பிரபல இரும்பு வர்த்தகர் வைத்திலிங்கம் என்பவரின் இரண்டாவது மகள் கற்புக்கரசி பொன்மணி என்பவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் புரிந்தனர். இவ்விருவரின் இல்லறவாழ்க்கையின் பெறுபேருக இப்பொழுது சிவபதமடைந்த மங்களாம்பிகை என்னும் புதல்வியைப் பெற்றனர். இவரைப் பெரியவிளானைச் சேர்ந்த மலையாள பிரபல வியாபாரியும், சிறந்த மதிப்புடைய கமக்காரருமாகிய காலஞ்சென்ற முருகேசு சிவகுரு பெண் அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் ஆசிரியருமான இரண்டாவது மகன நடராஜா அவர்களுக்கு திருமணம் செய்தனர். மேற்படி மங்களாம்பிகைக்குப்பின் பிறந்தோர் கணேசன், நடேசன், புவனேந்திரன், கணேசு, பெண் லலிதாம்பிகை ஆவார். சொல்லப்பட்ட பொன்மணி இறைவனடி சேர்ந்தபின் அன்னாரின் சகோதரி இராசமணியை விவாகஞ்செய்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இறைவனடி சேர்ந்த வரதராஜனைப் பெற்றனர்.

மங்களாம்பிகையின் கணவரின் சகோதரர்கள் துரைராசா, தம்பிராசா, நவரத்தினம், இராசஇரத்தினம், செல்வராசா, நல்லதம்பி, பெண் தவமணி ஆனந்தராசா, பெண் சரஸ்வதி ஆவார்.

மேற்கூறிய பார்வதிப்பிள்ளையின் பேரனின் மூதற்குழந்தையாதலால் இவரை அன்பு பாசம் காரணமாக கண்ணுங்கருத்துமாகச் செல்லமாகப் பேணி வளர்த்தார். ஆகவே ஆரம்பத்திலிருந்து இறுதிவரை செல்லப்பிள்ளையாகவே வாழ்ந்தனர். பூட்டியார், தந்தைதாயார் சகோதரசகோதரி உற்றுர் உறவினர் நண்பர்கள் மீதும் அன்பும் மதிப்பும் மிகுந்தவராக என்றும் மலர்ந்த முகத்துடன் சுயநலமற்றவராகவும் விபரீதபுத்தி அற்றவராகவும் இறைவழிபாட்டில் அக்கறையுள்ளவராகவும் வாழ்ந்தனர். சிலநேரங்களில் அவவுக்கு விருப்பமற்ற செயல்களைச் செய்யுமிடத்து மனவேதனையால் கோபம் ஏற்பட்டாலும் உடன் அதை மறந்து சாந்தமடையும் தன்மை வாய்ந்தவராக வாழ்ந்தனர். இக்காலத்துப்பலரைப் போல் அதிக விருப்பு வெறுப்பு இல்லாதவராகத் திகழ்ந்தனர். சுருங்கச்சொல்லின் ஒரு குழந்தையுள்ளம் படைத்தவராக வாழ்ந்தனர். சுய நல ஆசை அற்றவராக மற்றவர்களுக்கு கொடுக்கும் சிறந்த பண்புமுள்ளவர்.

இவர் கருவுற்று மகிழ்ச்சியுடன் இருக்கும்பொழுது வினைப்பயனினால் அது சிதைவுற்றது. புத்திர பாக்கியம் இல்லாது இருந்த போதிலும் தனது உடன் பிறந்தவரதும் கணவனது சகோதரரதும் குழந்தைகளையும் பேதமின்றி எல்லாச் சிறுவர்களையும் தான் ஈன்றெடுத்த பிள்ளைகள் போல் அன்பாகத் தழுவி உச்சி முகர்ந்து இன்புறும் சிறந்த பண்பை அணிகலமாகக் கொண்டவர். "மருந்தோடாயினும் விருந்தோடுண்" என்ற மூதுவாக்கியத்திற்கு அமையத்தான் உண்பவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து உண்ணும் பண்பு வாய்ந்தவர்.

தனக்கு திருமாங்கல்யம் தரித்த கணவனிடம் அன்பும், அக்கறையும், மதிப்பும் உள்ளவராக இறுதிவரை வாழ்ந்தவர். அதே வகையில் தனது மாமன், மாமி, மைத்துனர்களிலும் அன்புள்ளவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக நட்சத்திரம் கூடிய 5-10-34ல் தோன்றியவர், 49வது வயது ஒரு வாரம் முடிந்த 12-10-83 புதன்கிழமை மூலநட்சத்திரமும் பூர்வபட்ச சப்தமி திதியுங் கூடிய மாலை 7-30 மணிக்கு அநித்தியமான பூதவுடலை நீத்து அருட் பேறு பெற்றனர். எமது வாழ்வில் பூதவுடலை விட்டு நீங்குதலாகிய மரண மென்பதே நிச்சயமானது.

நாம் செய்துள்ள வினைகளுக்கமையவே சகலதும் நிகழுகின்றன என் னும் பேருண்மைக்கமைய இவர் 4-10-83ல் இரத்த அழுத்த நோயால் பீடிக் கப்பட்டு திருநெல்வேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்ப்பாணத் திலுள்ள மிகவும் சிறந்த ஆங்கில வைத்தியரால் சிகிச்சை பெற்று குணம டைந்து வருகையில் காத்திராப்பிரகாரம் 12-10-83ல் பிற்பகல் மறைவுக்குரிய அறிகுறிகள் தோன்றி மாலை 7-30 மணிக்குத் தமது பூதவுடலை நீத்தனர். இவ்வுடலில் இருக்கவேண்டிய நேரம் வரை இருந்து மறையும் நேரம் மறைந் தனர். இது சாதாரணமான ஒன்றுதலால் மனதைத் தேற்றி இவரது ஆத்மா நற்கதியடையப் பிரார்த்திப்பதே நாம் செய்யும் கடமையாகும்.

" நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு " என்ற வள்ளுவன் வாய்மொழிப் படி எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். (யோக சுவாமிகள்)

ஓம் சாந்தி !

## தந்தை பிரலாபம்

### கொச்சகம்

பெற்றுப் பெயரிட்டுப் பெருமிதமாய் நாமிருக்க
உற்ற உறவினர்கள் உலகில் மதிப்பளிக்க
கற்றவழி வாழ்ந்தவுயர் கண்மணியே மங்களமே
பற்றிலான் பாதமலர் பற்றியதென் பாங்குறவே

மங்களாம்பிகை யென மாநிலத்தில் வந்தவுயர்
தங்கிய நன் மகளாரே தலைவன் நடராஜா
இங்கிருந்து வாட ஏன் நீ பிரிந்தாயே
கங்கையணியீசன் காதலுள காரிகையே.

## உடன்பிறந்தார் பிரலாபம்

### அறுசீர் விருத்தம்

ஒரு வயிற்றுதித்து வந்தோம் ஒரு கலந்துண்டு வந்தோம்
இருதனை நிகர்த்தா அக்கா தெய்வமே போல வந்தாய்
அருமறை புகலும் வேதம் அமலனைத் தொழுதே வந்தாய்
வரு குறைவின்றி வாழ்ந்தாய் மறந்தனை ஐயோ அந்தோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுப்பிரலாபம்

### ஆசிரிய விருத்தம்

அணிதங்க வந்தவடி வழகான தோற்றமும்
அம் சிறையன்ன நடையும்
அணிந்த திருநீற்றின் ஒளி அது கண்டுமெற்றவர்கள்
அரனை மறவாமை செய்தாய்
பணி செய்யவேயுள்ளம் கொண்டுள்ள ஈசரைக்
படித்தவர்கள் பாலின் அன்பு
பார்க்கவே நவாலி மணிமண்டபம் மானிப்பாய்
பக்கமுற ஆங்கு சென்று
மணி செய்யும் ஓசைஒலி வேலக்கைப்பிள்ளையார்
மாபணிக்குதவி செய்தோய்
மலரடியை மறவாத மாதவச் செல்வியே
மங்களாம்பிகையென் தாயே
கனிசெய்ய அயலுய்ய உறவுய்ய கற்பகக்
காவென்ன வந்த கனியே
கவலையிணி நீங்கவெமக்கருளவும் வேண்டுமே
கயிலையங்கிரியதனிலே.

### தேற்றம் — நேரிசை வெண்பா

மண்ணிற் பிறந்தார் படுதல் உலகியற்கை
எண்ணித் துயருற்றிரங்குவதேன் — அண்ணலின்பால்
ஏற்றுங்கள் போற்றுங்கள் எல்லாம் சிவன் செயலே
ஆற்றுங்கள் துன்பம் அகல.

### தேவாரம்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூரரனே.

### திருவிசைப்பா

செங்கணு போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணு போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கள் நால்மறை நூல் சகலமும் கற்றோர்
சாட்டியக் குடியிருந்தருளும்
எங்கள் நாயகனே போற்றியேழ் இருக்கை
இறைவனே போற்றியே போற்றி.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

யாவையும் படைப்பாய் போற்றி
யாவையும் துடைப்பாய் போற்றி
யாவையும் ஆனாய் போற்றி
யாவையும் அல்லாய் போற்றி
யாவையும் அறிந்தாய் போற்றி
யாவையும் மறந்தாய் போற்றி
யாவையும் புணர்த்தாய் போற்றி
யாவையும் பிரிந்தாய் போற்றி.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனை பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தான சற் குணர்நேயா
ஒப்பில்லா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோத்திரம்

## சூரியன்

காசினி யிருளை நீக்குங் கதிரொளி யாகி யெங்கும்
பூசனை உலகோர் போற்றப் புசிப்பொடு சுகத்தை நல்கும்
வாசியே ழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா வெனை ரட்சிப்பாய் செங்கதி ரவனே போற்றி.

## சந்திரன்

அலைகட லதனில் நின்று அன்றுவந் துதித்த போது
கலைவளர் திங்க ளாகிக் கடவுள ரெவரு மேத்தும்
சிலைநுத லுமையாள் பங்கன் செஞ்சடைப் பிறையாய் மேரு
மலைவல மாக வந்த மதியமே போற்றி போற்றி.

## செவ்வாய்

வசனநற் றைரியத் தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்கிர மங்கள் போர்தனில் வெற்றி யாண்மை
நிசமுட னவர வர்க்கு நீணிலந் தனில ளிக்கும்
குசனில மகனுஞ் செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி.

## புதன்

மதனநூல் முதலாய் நான்கு மறைபுகல் கல்வி ஞானம்
விதமுட னவர வர்க்கு விஞ்சைக ளருள்வோன் திங்கள்
சுதன்பசு பாரி பாக்கியஞ் சுகம்பல கொடுக்க வல்லான்
புதன்கவிப் புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி.

## குரு

மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க் கரசன் மந்திரி
நறைசொரி கற்ப கப்பொன் நாட்டினுக் கதிப னாகி
நிறைதனஞ் சிவிகை மண்ணில் நீடுபோ கத்தை நல்கும்
இறையவன் குருவி யாழன் இருமலர்ப் பாதம் போற்றி.

## சுக்கிரன்

மூர்க்கவான் சூரன் வாணன் முதலினோர் குருவாய் வையங்
காக்கவான் மழைபெய் விக்குங் கவிமகன் கனக மீவோன்
தீர்க்கவா னவர்கள் போற்றச் செத்தவர் தமையெ ழுப்பும்
பார்க்கவன் சுக்கி ரன்றன் பாதபங் கயங்கள் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனி

முனிவர்க டேவ ரேழும் மூர்த்திகள் முதலி னோர்கள்
மனிதர்கள் வாழ்வு முன்றன் மகிமைய தல்லா துண்டோ
கனிவுள தெய்வஞ் நீயே கதிர்சேயே காக மேறும்
சனியனே உனைத்து திப்பேன் தமியனேற் கருள் செய்வாயே.

## ராகு

வாகுசேர் நெடுமாள் முன்னம் வானவர்க் கமுத மீயப்
போகுங்கக் காலை யுன்றன் புணர்ப்பினுற் சிரமே யற்றுப்
பாகுசேர் மொழியாள் பங்கன் பரன்கைகயில் மீண்டுப் பெற்ற
ராகுவே உனைத்து திப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே.

## கேது

பொன்னையின் உரத்திற் கொண்டோன் புலவர்தம் பொருட்டா லாழி
தன்னையே கடைந்து முன்னந் தண்ணமு தளிக்க லுற்ற
பின்னைநின் கரவா லுண்ட பெட்பினிற் சிரம்பெற் றுய்ந்தாய்
என்னையான் கேது வேயிவ் விருநிலம் போற்றத் தானே.

## பொது

சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியாழன் வெள்ளி
காரியு மிராகு கேது கடவுளர் ஒன்பான் நாமத்
தாரியல் சக்க ரத்தைத் தரித்திரர் பூசித்தாலும்
பாரினில் புத்திர ருண்டாம் பாக்கியம் நல்குந் தானே.

* ✤ *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது அன்புக்குரிய மங்களாம்பிகை நடராஜா நோயுற்ற
காலத்தில் துணை புரிந்தோருக்கும், அருட்பேறு பெற்ற
பின்னர் அவருக்கு நிகழ்ந்த சமயக் கிரியைகளில்
கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி
கள், மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும்,
மனவிருப்புடன் மற்றும் உதவிகளைப் புரிந்த
வர்களுக்கும் தனித்தனி எமது பணிவான
அன்பு கலந்த நன்றியைச்
சொரிகின்றோம்.

நன்றிப்பெருக்குள்ள

முதலியார் வை. மகேசனும்
குடும்பத்தவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org